செய்தி வெளியீடு எண்.26 நாள் 10.01.2017

# வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

~~~~~~

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. படித்துவிட்டு வேலைவாய்ப்பு வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 வருடம் கடந்த நிலையில் (மாற்றுத்திறனாளிகளை பொறுத்தவரையில் 1 வருடம்) 10ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.150/-ம், 12ஆம் வகுப்பு / தொழிற்கல்வி பட்டயப் படிப்பில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.200/-ம், பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/ம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 9-வது வகுப்பு தேர்ச்சி பெற்று, பின்னர் 10-வது பள்ளியிறுதி தேர்வில் கலந்து கொண்டு தோல்வியடைந்தவர்களுக்கு மாதம் தோறும் ரூ.100/- உதவித்தொகை வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான இந்த உதவித் தொகை திட்டத்தின்படி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி மற்றும் அதற்கு குறைவான கல்வித் தகுதியுடையோர் மாதம் ரூ.600/-ம், 12ஆம் வகுப்பு / தொழிற்கல்வி பட்டயப் படிப்பில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.750/ம், பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.1,000/-ம் வழங்கப்பட்டு வருகிறது. வயது வரம்பினை பொருத்தவரையில் தாழ்த்தப்பட்டோருக்கு 45 வயதும், ஏனையோரைப் பொருத்தவரையில் 40 வயதை பூர்த்தியடையாமலும் இருத்தல் வேண்டும்.

ஏற்கனவே வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற்று வருவோர் கவனத்திற்கு : வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வருவாய்த் துறையின் ஒட்டு மொத்த சான்றுகளுடன் உதவித் தொகைக்கான விண்ணப்பம் சமா்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு கழித்து, இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் ‘பணியில் இல்லை’ என்ற சுய உறுதி மொழி படிவத்தை கண்டிப்பாக அளிக்க வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட சுய உறுதி மொழி படிவத்துடன் இணைக்கப்படவேண்டிய விவரங்கள் : நாளது தேதி வரையிலும் புதுப்பித்தல் செய்யப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை மற்றும் வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றின் போட்டோ நகல்கள் இணைக்கப்பட்டு நேரில் அல்லது அஞ்சல் மூலம் சமா்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமா்ப்பிக்கத் தவறினால் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை உடனடியாக நிறுத்தப்படும்.

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற்று வரும் பயனாளிகள் தங்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு அடையாள அட்டையை உரிய காலத்தில் புதுப்பித்தல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு புதுப்பித்தல் செய்த விவரத்தை தவறாமல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கும் பிரிவில் அவ்வப்போது தெரிவிக்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவை புதுப்பிக்கத் தவறியவர்களின் உதவித்தொகை உடனடியாக நிறுத்தப்படும். வேலைவாய்ப்பறோர் உதவித் தொகை பெறுவதால் பதிவு ஏதும் ரத்தாகாது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~